1. நடப்பாண்டின் (2021) ஹரித்துவார் கும்பமேளா தொடங்கவுள்ள தேதி எது?

அ) மார்ச் 1

ஆ) ஏப்ரல் 1 ☑

இ) மே 1

ஈ) ஏப்ரல் 30

✓ வழமையாக 3 மாதங்களுக்கு நடைபெறும் ஹரித்துவார் கும்பமேளா, நடப்பாண்டில் (2021) 30 நாட்களுக்கு மட்டும் நடத்த உத்தரகண்ட் அரசு முடிவுசெய்துள்ளது. இதனை அம்மாநிலத்தின் தலைமைச் செயலர் ஓம் பிரகாஷ் தெரிவித்தார். ஹிந்துக்களின் மிகவும் புனிதமான நிகழ்வுகளில் ஒன்றான கும்பமேளா, இம்முறை 2021 ஏப்.1–ஏப்.30 வரை நடைபெறும்.

2.பின்வரும் எம்மாநிலத்தில், 'மகாபாகு–பிரம்மபுத்திரா' திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கிவைத்தார்?

அ) ஒடிசா

ஆ) அஸ்ஸாம் ☑

இ) மேற்கு வங்கம்

ஈ) ஜார்க்கண்ட்

✓ நியமத்தி – மஜிலி தீவுகளுக்கு இடையில், வடக்கு கௌகாத்தி – தெற்கு கௌகாத்தி இடையில், தூப்ரி – ஹட்சிங்கிமரி இடையில் ரோ–பாக்ஸ் சேவையைத் தொடங்கிவைத்ததன்மூலம் 'மகாபாகு – பிரம்மபுத்திரா' திட்டத்தை பிரதமர் மோடி தொடங்கிவைத்தார். இந்தியாவின் கிழக்குப் பகுதியில் தடையற்ற போக்குவரத்து இணைப்புவசதி கிடைக்கச்செய்யும் நோக்கில் இந்தத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

3.இந்தியாவிற்கும் பின்வரும் எந்த நாட்டிற்கும் இடையே விரிவான பொருளாதார ஒத்துழைப்பு & கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட நடுவண் அமைச்சரவை ஒப்புதல் அளித்தது?

அ) கனடா

ஆ) மலேசியா

இ) மொரீஷியஸ் ☑

ஈ) சிங்கப்பூர்

✓ இந்தியா மற்றும் மொரீஷியஸுக்கிடையேயான விரிவான பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. ஆப்பிரிக்காவில் உள்ள ஒரு நாட்டுடன் வர்த்தக ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடுவது இதுவே முதல் முறையாகும்.

✓ வரைமுறைக்கு உட்பட்ட இந்த ஒப்பந்தத்தின்கீழ், சரக்கு மற்றும் சேவை –கள் வர்த்தகம், வணிகத்திற்கான தொழில்நுட்பத் தடைகள், சுகாதாரம் மற்றும் தாவர ஆரோக்கிய நடவடிக்கைகள், நபர்களின் போக்குவரத்து, தொலைத்தொடர்பு, நிதி சேவைகள், சுங்க நடைமுறைகள் மற்றும் இதர துறைகளில் ஒத்துழைப்பு இடம் பெறுகின்றன.

4.உலக சூரிய ஆற்றல் வங்கியை தொடங்குவதற்கு திட்டமிட்டுள்ள அமைப்பு எது?

அ) ஐக்கிய நாடுகள் அவை

ஆ) பன்னாட்டு சூரிய ஆற்றல் கூட்டணி ☑

இ) SAARC

ஈ) உலக வங்கி

✓ பன்னாட்டு சூரிய ஆற்றல் கூட்டணியானது (ISA) உலக சூரிய ஆற்றல் வங்கியை (World Solar Bank) தொடங்கவுள்ளது. 2021 நவம்பரில் கிளாஸ்கோவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்ற மாநாட்டில் இது குறித்த அறிவிப்பு வெளியிடப்படும்.

5.இந்திய கடலோரக்காவல்படை நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?

அ) பிப்ரவரி 01 ☑

ஆ) பிப்ரவரி 02

இ) பிப்ரவரி 03

ஈ) பிப்ரவரி 04

✓ சமீபத்தில், இந்திய கடலோரக் காவல்படை தனது 43ஆவது உருவாக்க நாளை பிப்ரவரி 1 அன்று கொண்டாடியது. பாதுகாப்பு அமைச்சகத்தின்கீழ் 1978ஆம் ஆண்டு கடலோரக் காவல்படை சட்டம் அமல்படுத்தப்பட்டதன் மூலம், நாட்டின் முழுமையான தன்னாட்சிமிக்க ஆயுதப்படையாக 1977 பிப்.1 அன்று இந்திய கடலோரக் காவல்படை எழுப்பப்பட்டது. நாட்டின் பரந்த கடற்பரப்பை பாதுகாப்பதே இதன் முதன்மைப்பணியாகும்.

6.நடப்பாண்டு (2021) வரும் உலக ஈரநிலங்கள் நாளுக்கான கருப்பொருள் என்ன?

அ) Wetlands for Us

ஆ) Wetlands and Water ☑

இ) Wetlands and COVID–19

ஈ) Save Wetlands

✓ ஈரநிலங்களின் முக்கியத்துவம் மற்றும் புவியில் அதன் பங்குபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த ஆண்டுதோறும் பிப்ரவரி.2 அன்று உலக ஈர நிலங்கள் நாள் அனுசரிக்கப்படுகிறது. "ஈரநிலங்கள் மற்றும் நீர்" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

✓ நடப்பாண்டின் (2021) கருப்பொருள், நன்னீரின் ஆதாரமாக விளங்கும் ஈரநிலங்களின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.

7.நடப்பாண்டு (2021) வரும் உலக புற்றுநோய் நாளுக்கான கருப்பொருள் என்ன?

அ) We can. I can

ஆ) I am and I will ☑

இ) Not Beyond Us

ஈ) Cancer can be prevented

✓ ஆண்டுதோறும் பிப்.4 அன்று உலக புற்றுநோய் தினமாக அனுசரிக்கப்ப –டுகிறது. புற்றுநோய் தொடர்பாக பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி, ஆரம்ப நிலையிலேயே நோயைக் கண்டறிந்து, குணப்படுத்த வேண்டும் என்பதற்காக இந்நாள் அனுசரிக்கப்படுகிறது. "I am and I will" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும். கடந்த 2019ஆம் ஆண்டு முதல் இதே கருப்பொருள் தெரிவாகிவருகிறது.

---

8. உலக யுனானி நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?

அ) பிப்ரவரி 11 ☑

ஆ) பிப்ரவரி 12

இ) பிப்ரவரி 13

ஈ) பிப்ரவரி 14

✓ யுனானி அறிஞரும் சமூக சீர்திருத்தவாதியுமான ஹகீம் அஜ்மல்கானின் பிறந்தநாளைக் குறிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் பிப்.11 அன்று உலக யுனானி நாள் அனுசரிக்கப்படுகிறது.

✓ யுனானி மருத்துவ முறையில் அறிவியல் ஆராய்ச்சியை நிறுவியவர் ஹகீம் அஜ்மல்கான். கிரேக்கத்தில் தோன்றிய யுனானி மருத்துவ முறை –க்கு அடித்தளமிட்டவர் ஹிப்போகிரட்டீஸ்.

9.நடப்பாண்டு (2021) பெண் பிறப்புறுப்பு சிதைப்பு எதிர்ப்புக்கான பன்னாட்டு நாளின் (International Day of Zero Tolerance for Female Genital Mutilation) கருப்பொருள் என்ன?

அ) End Female Genital Mutilation

ஆ) Unleashing Youth Power

இ) No Time for Global Inaction, Unite, Fund, and Act to End Female Genital Mutilation ☑

ஈ) Intensify Global Efforts

✓ பெண் பிறப்புறுப்பு சிதைப்பு எதிர்ப்புக்கான பன்னாட்டு நாள் ஆண்டுதோ –றும் பிப்.6 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. பிறப்புறுப்பு சிதைப்பு அல்லது மருத்துவ ரீதியற்ற காரணங்களுக்காக பெண் பிறப்புறு –ப்பில் மாற்றங்களை மேற்கொள்வது ஆப்பிரிக்காவின் மத்திய கிழக்கு மற்றும் உலகின் பிற 30 நாடுகளில் நடைமுறையில் உள்ளது.

- ✓ கடந்த 2012'இல், பிப்ர்வரி.6ஆம் தேதியை பெண் பிறப்புறுப்பு சிதைப்பு எதிர்ப்புக்கான சர்வதேச நாளாக ஐநா பொது அவை அறிவித்தது. வரும் 2030ஆம் ஆண்டுக்குள் இந்த நடைமுறையை முற்றாக ஒழிப்பதற்கு ஐநா அவை செயல்பட்டுவருகிறது.

---

10. உலக வானொலி நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?

அ) பிப்ரவரி 12

ஆ) பிப்ரவரி 13 ☑

இ) பிப்ரவரி 14

ஈ) பிப்ரவரி 15

- ✓ உலக வானொலி நாளானது ஒவ்வோர் ஆண்டும், பிப்.13 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. இந்த நாள் முதன்முதலில், 2011'இல் UNESCO'இன் உறுப்புநாடுகளால் அறிவிக்கப்பட்டது. ஐநா பொது அவை 2012'இல் இந்த முன்மொழிவை ஏற்றுக்கொண்டது.
- ✓ நடப்பாண்டு (2021) வரும் உலக வானொலி நாள் பரிணாமம், புதுமை & இணைப்பு ஆகிய 3 முக்கிய துணை கருப்பொருள்களை அடிப்படை –யாகக் கொண்டது. இந்நாளின்போது, "New World; New Radio" என்ற காணொலியை UNESCO வெளியிட்டது.